## ஹாலி எல பிரதேசசபை
## பதுளை மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்.

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஆம் ஆண்டினி மர்ச்சு மாதம் 07 திகதி கணக்காய்வுக்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அதிபதியின் விரிவான அறிக்கை 2019 ஆம் ஆண்டின் மே மாதம் 30 ஆம் திகதியும் விரிவான விபரங்களடங்கிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியும் தவிசாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.2 நிலைப்படுத்தப்பட்ட அபிப்ராயம்

இந்த அறிக்கையில் நிலையை விளக்கிய அபிப்ராயம் தொடர்பாக விபரத்தை தரும் பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலுள்ள விளைவுகள் தவிர்ந்த நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஹாலி எல பிரதேசசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் ஆணிடிற்கான அதன் நிதி செயற்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிகளுக்கமைவாகவும், உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை பிரதிபலித்து நிற்கின்றமையே எனது அபிப்ராயமாகும்.

1.3 நிலைப்படுத்தப்பட்ட அபிப்ராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டு ரீதியிலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (i) | நிதி நிலை தொடர்பான கூற்றில் கட்டிடம் மற்றும் காணியின் கீழ் மின்சார விநியோகத்திற்கான உப அலுவலக பெறுமதி ரூ. 100,000 ஆக பெறுமதி முன்வைக்கப்பட்டிருப்பினும், அத்தகைய நிலையான ஆதனமொன்று காணப்படவில்லை. | சரியான விதத்தில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | தவறை ஒப்புக்கொள்வதுடன், எதிர்வரும் ஆண்டில் அதனை நிவர்த்திக்கின்றேன். |
| (ii) | ரூ. 38,498 பெறுமதியான பாவனையாளர் பொருட்கள், நிலையான ஆதனமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியான விதத்தில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | தவறை ஒப்புக்கொள்வதுடன், எதிர்வரும் ஆண்டில் அதனை நிவர்த்திக்கின்றேன். |
| (iii) | கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்காக கிடைக்க வேண்டிய நிலையான பிரசார அறிவித்தல் பலகைக்கான கட்டணங்கள் கிரமமாக, ரூ. 154,400 மற்றும் ரூ.48,225 ஆக கணக்கிடப்பட்டிருக்கிவ்லலை. | சரியான விதத்தில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்வதுடன், ரூ.48,225 ஆன மிகுதி 2019 ஆண்டில் நிவர்த்திக்கப்படுவதாகவும், ரூ.154,400 தொகை தொடர்பாக தகவல் |

| | | | |
|---|---|---|---|
| | | | இல்லாதிருப்பதால் எதிர்வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூ. 9,310,191 கூடுதலாகவும் நிலுவை முத்திரைக்கட்டணம் ரூ. 9,684,172 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.<br><br>யு.ளுயசயறயயெடிாயறயெ | சரியான விதத்தில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | தவறை ஒப்புக்கொள்வதுடன், எதிர்வரும் ஆண்டில் அதனை நிவர்த்திக்கின்றேன். |
| (v) | உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு எதிர்வரும் ஆண்டில் செலுத்த வேண்டிய ரூ. 2,016,943 ஆன நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் நிலையற்ற பொறுப்பென (நடமாடும்) காட்டப்படவில்லை. | சரியான விதத்தில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | தவறை ஒப்புக்கொள்வதுடன், எதிர்வரும் ஆண்டில் அதனை நிவர்த்திக்கின்றேன் |
| (vi) | மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டில் வேலை நிறைவுசெய்யப்பட்ட செயற்றிட்டங்கள் 10 இற்காக ரூ.69,265 அதிகமான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் என்ற விதத்தில் நிதியூட்டல் செய்யப்பட்டு காணப்பட்டது. | சரியான விதத்தில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | தவறை ஒப்புக்கொள்வதுடன், எதிர்வரும் ஆண்டில் அதனை நிவர்த்திக்கின்றேன் |
| (vii) | ஊழியர் பிணை வைப்பு ரீதியான முதலீட்டுத்தொகை ரூ.27,702 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கில்லை. | சரியான விதத்தில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | தவறை ஒப்புக்கொள்வதுடன், எதிர்வரும் ஆண்டில் அதனை நிவர்த்திக்கின்றேன் |
| (viii) | கடந்த ஆண்டுகளில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரூ.392,553 ஆன தொகை இயந்திர சாதன பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | சரியான விதத்தில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | தவறை ஒப்புக்கொள்வதுடன், எதிர்வரும் ஆண்டில் அதனை நிவர்த்திக்கின்றேன் |

(ஆ) ஒழுங்கற்ற வைப்புக்கள

| அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ------------------------------------------------ | ---------------------------- | ----------------------- |
| மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபைக்கு எதிராக 02 வெளியாரினால் தொடுக்கப்பட்ட 02 வழக்குகள் தொடர்பான தகவல்கள் | ஒழுங்கற்ற வைப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்கிளல் வெளிப்படுத்தப்பட | தவறை ஏற்றுக்கொள்வதாகவும், எதிர்வரும் ஆண்டுகள் நிவர்த்திக்கின்றேன். |

| | |
|---|---|
| நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கில்லை. | வேண்டும். |

(இ) ஒப்பீடு செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ஆறு கணக்கு தொடர்பான விடயங்களின் நிதிக்கூற்றுக்கு அமைய மிகுதி மற்றும் அந்த உப அட்டவணைக்கு அமைய ரூ.91,577,297 வேறுபாடு காணப்பட்டது. | ஆவணங்கள் மற்றும் உபஅட்டவணைகள் சரியான முறையில் இற்றைப்படுத்தப்பட்டு பொருத்தப்பாடில்லாமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். | வேறுபாட்டை ஏற்றுக்கொள்வதாகவும், மீளவும் பரிசோதித்து பார்த்து எதிர்வரும் ஆண்டுகளில் சரிசெய்வேன். |

(ஈ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ரூ.53,260,104 தொகை 4 சொத்து விடய்ஙகள் ரூ.61,105,493 ஆக ஒரு பொறுப்புக்கூறல் விடயம் தொடர்பான மதிப்பீட்டறிக்கை இற்றைப்படுத்தப்பட்ட நிலையான ஆதனப்பதிவேடு மிகுதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருத்தாமையினால் கணக்காய்வில் திருப்திப்படக்கூடிய வித்தில் யதார்த்தம் உரைக்க முடியவில்லை. | கணக்காய்வுடன் தொடர்புடத்தக்க சாட்சிகள் கணக்குடன் சமர்ப்பிக்க வேண்டும். | இனிவருங்காலங்களில் சரிசெய்கின்றேன். |

1.4 ஏற்புடையதாக இருக்காமை
சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக காணப்படாமை

| சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு உட்பிரவேசிப்பு | ஏற்புடையதாக இருக்காமை | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| ---------------------- | ------------------------------ | ------------------ | --------------------- |
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டம் 139 ஆம் பிரிவு | சோலைவரி விதிப்புக்குட்பட்ட ஏதாவது வீட்டின் கட்டிடத்தின் காணியின் அல்லது வீட்டுத்துண்டின் ஆண்டுரீதியான பெறுமதியை மதிப்பிடக்கூடியவாறு அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை. | சட்ட பிரிவுக்கு அமைய அறிக்கைகள் கோரப்பட வேண்டும். | வருகின்ற ஆண்டுகளில் அறிக்கைகளை கோருகின்றேன். |
| (ஆ)இலங்கை ஜனநாயக சோசலி குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 396 (இ) பிரிவு | ரூ.21,250 பெறுமதி விநியோகிக்கப்பட்டிருப்பினும் காசாகாத 06 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்கு விதிகளுக்கமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனங்களுக்கு ஞாபகமூட்டல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், மிகுதிகளை வருங்காலத்தில் சரிசெய்வேன். |
| (உ) )இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக்கோவை ஒஒளை அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | சபையில் வேலை செய்த 14 ஊழியர்களிடம் 06 வருடங்களுக்கு அதிக காலமாக அறவிட வேண்டிய ரூ.153,7236 தொகையான ஊழியர் கடன் தொகை அறவிடப்படவில்லை. | நிலுவை கடன் மிகுதி அறவிடப்பட வேண்டும். | ரூ.94,411 தொகையை அறவிடுவதற்கு ஆவன செய்வதுடன், ஏனைய மிகுதிகளை அறவிடுவதற்கு கடிதங்கள் ஆவணங்கள் இல்லாமையினால் மிகுதியை வருங்காலத்தில் நீக்குவேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்களுக்கமைய டிசம்பர் 31 திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான பிரதேசசபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய ரூபா வருமானம் 7,687,228 ஆவதுடன், அதற்கிசைவான வருடத்தின் மீண்டுவரும் வருமானம் ரூ.13,943,245 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடு செய்யப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், திரட்டிய வருவாய் மற்றும் நிலுவை வருவாய் _ மீளாய்வு செய்யப்பட்ட வருடம் மற்றும் நிறைவடைந்த வருடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாய் மூலம். | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியிலிடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 திகதிக்கு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியிலிடப் பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 திகதிக்கு மொத்த நிலுவை |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| (i) | சோலைவரி மற்றும் வரி | 2,665,374 | 2,672,797 | 2,222,144 | 3,176,496 | 2,529,820 | 3,173,940 | 3,173,101 | 2,725,842 |
| (ii) | வாடகை | 586,022 | 579,382 | 402,315 | 513,443 | 483,302 | 577,246 | 573,061 | 348,376 |
| (iii) | பிற வருமானம் | 2,135,000 | 2,197,627 | 2,256,531 | 1,367,864 | 2,123,000 | 2,092,193 | 747,856 | 1,426,767 |
| | மொத்தம் | 5,386,396 | 5,449,806 | 4,880,990 | 5,057,803 | 5,136,122 | 5,843,379 | 4,494,018 | 4,500,985 |

#### 2.2.2 சோலைவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| (அ) சோலைவரி<br>சோலைவரி அறவிடுவதற்கு பொருத்தமான பிரதேசங்கள் 2012 ஆம் ஆண்டில் இனங்காணபட்டுள்ளதுடன், அதன்பின்னர் காலத்துக்குக் காலம் அபிவிருத்தி செய்த பிரதேசங்களை இனங்கண்டு சோலைவரியை அறவிடுவதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | விருத்தி செய்த பிரதேசங்களை காலத்துகாலம் இனங்கண்டு குறித்த வழிமுறைகளை பின்பற்றி சோலைவரி அறவிடப்பட வேண்டும். | வருங்காலத்தில் விருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு சோலைவரி அறவிடுவதற்கு ஆவன செய்வேன் |

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வு செய்த வருடத்திற்கு பட்டியலிடப்பட்ட ரூ.2,610,831 ஆன சோலைவரி வருவாயில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை ரூ.1,383,513 ஆனதுடன், பட்டியிலிடப்பட்ட மொத்த பெறுமதியில் நூற்றுக்கு 53 ஆனது. | நிலுவை சோலைவரி அறவிட வேண்டும். | வருங்காலத்தில் அறவிடுவேன். |
| (ii) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூ.2,699,343 ஆன சோலைவரி வருவாயில் வருடத்தில் ரூ.1,846,845 அறவிடப்படவில்லை. | நிலுவை சோலைவரி அறவிடப்பட வேண்டும்.. | ஆதனநடுக்கட்டல் செய்து நிலுவையில் ஓர் பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன், மிகுதி நிலுவையை அறவிடுவதற்கு ஆவன செய்வேன். |
| (அ) | சோலைவரி<br>சபைக்குரித்தான 02 சொத்துக்களில் மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய ரூ.32,210 தொகை அறவிடப்படாமல் இருந்தது. | அறவிட வேண்டிய வரித்தொகை அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவேன். |

2.2.3 கடையறை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| சபைக்குரித்தான 25 கடையறைகளில் மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய ரூ.83,559 தொகை அறவிடாமல் இருந்தது. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | 25 கடைகளில் 2 கடைகள் சபைக்குரியன என்பதை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல அத்தாட்சிகள் இல்லாமையால், மிகுதி 23 கடைகளில் எதிர்காலத்தில் வாடகை அறிவிடுவேன். |

2.2.4 நிலையான வர்த்தக பிரசார விளம்பர பதாகைகள் கட்டணம் மூலமான வருவாய்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| -------------------------- | ------------- | ------------------ |
| மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வருமதியாய் உள்ள ரூ.202,625 தொகை நிலையான வர்த்தக விளம்பர அறிவிப்பு பதாகை கட்டணமாக அறவிடப்படவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்வதுடன், ரூ.48,225 ஆன மிகுதி 2019 ஆண்டில் நிவர்த்தி செய்வதுடன், ரூ.154,400 தொடர்பாக தகவல்கள் இல்லாமையால் வருங்காலத்தில் நடவடிக்கையெடுப்பேன். |

2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| --------------------------------------------------------- | -------------- | ------------------ |
| மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடவுள்ள நிலுவை நீதிமன்ற தண்டப்படணம் ரூ.12,951,800 உம் நிலுவை முத்திரைக்கட்டணம் ரூ.21,449,152 ஆகவும் அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானம் அறவிட வேண்டும். | வருங்காலத்தில் அறவிடுவேன். |

3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>செயலாக்கம்</u>

பிரதேசசபை சட்டத்தின் 03 பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடய்ஙகளை முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல், மக்களது வசதியான பயன்பாடு வசதி மற்றும் நலன்புரி ஆகியவையான சபையினால் நிறைவேற்ற வேண்டியதான கருமங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

(அ) உபவிதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| பிரதேசசபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 30 ஐ நிறைவேற்றுவதற்கு உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் 24 விடயங்கள் தொடர்பாக மாத்திரம் உபவிதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்காத விடய்ஙகளுக்காக உபவிதிகள் ஆக்கப்பட வேண்டும். | ஆக்கப்படாத உபவிதிகள் 06 உம் வருமாண்டில் ஆக்கப்படுவதற்கும் அவை செயற்படுத்துவதற்குமான நடவடிக்கையெடுப்னே. |

(ஆ) செயல் திட்டமிடல் வரைபு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்காக திட்டமிடல் வரைபொன்று தயாரிக்கப்பட்டிருப்பினும், வருடத்தில் செய்யத வேலைகள் இனங்காணப்படாமையினால், வருடாந்த செயலாக்க கண்ப்பீட்டை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | திட்டமிடல் வரைபை தயாரித்து வருட இறுதியில் செயலாக்க மதிப்பீட்டை செய்ய வேண்டும். | 2019 வருடத்தில் செயல் திட்டமிடல் வரைபுக்கு செய்பாடுகளை உள்ளடக்கி அதற்கிணங்க செயலாக்க மதிப்பீட்டுக்கான நடவடிக்கை எடுப்பேன். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிந்திருக்கவில்லையென்பதுடன் சபைக்குத்தாக மேற்கொள்ள | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையும் விருத்தி மட்டத்தை அளவிடல் வேண்டும். | நோக்கங்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கையை மேற்கொள்வேன். |

வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் இனங்காணப்படவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்பாட்டு ரீதியிலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தில் சபை அதிகார பிரதேசத்தில் மேற்கொண்டிருந்த அனுமதியற்ற கட்டிடங்களை இனங்காணுவதற்கு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. | 2019 வருடத்திற்காக கணக்கெடுப்பு செய்யப்படல் வேண்டும். | வருங்காலத்தில் கணக்கெடுப்பு செய்ய நடவடிக்கையெடுப்னே். |
| (ஆ) | 2010 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த திண்மக்கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும். | வருங்காலத்தில் தேவையான நடவடிக்கையை எடுப்னே். |

3.3 மனித வள முகாமைத்துவம் .

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| ( அ) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபிய்ன 07 பதவிகளுக்காக அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதி எண்ணிக்கையை விஞ்சியிருந்த 29 பேருடைய பதவிகள் அனுமதிக்கப்பட்டிருந்தது. | அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதியின் பதவிகள் அனுமதிக்கப்பட வேண்டும். | பதவிகள் அனுமதிக்கப்படுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்ப்ட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதியின் பதவிகள் 09 இற்காக நிலவிய வெற்றிடங்கள் 20 ஐ நிரப்புவதற்கு நடவடிக்கையெடுக்கப்படடிருக்கவில்லை. | பணியாட்தொகுதி வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | மூன்று பதவி வெறிறடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. |

3.4 <u>சொத்து முகாமைத்துவம்</u>
<u>வாகன நிர்வாகம்</u>

(அ) வாகனங்களது உரித்துடைமைய பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| 2014 வருடத்தில் நன்கொடையாக கிடைத்த கெப் வண்டியின் உரித்தை சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்களது உரித்தை பெற வேண்டும். . | கொடுப்பனவு நிறைவு செய்யப்பட்ட பின்னர் உரித்தை பெற்றுக்கொள்வேன். |

(ஆ) எரிபொருள் பாவனை தொடர்பான பரிசோதிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரது கருத்துரைப்பு |
|---|---|---|
| அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அமைச்சின் செயலாளரின் 2016 டிசம்பர் 29 ஆம் திகதி இல. 30/2016 இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்திக்கமைய சபைக்குரித்தான 13 வாகனங்களது எரிபொருள் பாவனை தொடர்பாக பரிசோதிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய எரிபொருள் பாவனை தொடர்பாக பரிசோதிக்க வேண்டும். | எரிபொருள் பாவனை தொடர்பாக பரிசோதிக்குமாறு மாகாண இயந்திரவியல் பொறியியலாளருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. |

3.5 <u>கொள்வனவு</u>
<u>கொள்வனவு திட்டவகுப்பாக்கம்</u>

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவு ஆவணத்திற்கு அமைவாக கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 வருடத்திற்கு திட்டம் தயாரிக்கிறேன். |

4. <u>கணக்கு தொடர்பான செயலாற்றல் மற்றும் நல்லாட்சி</u>

4.1 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு</u>

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்து திணைக்களத்தின் சுற்றிக்கை இல. டி.எம்.ஏ 2009 (01) இலக்க சுற்றறிக்கைக்கிணங்க உள்ளக கணக்காய்வு சுற்றிக்கைக்கமைய மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செய்றகுழுவினை தாபித்திருக்கவில்லை. | சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்து செய்றகுழுவினை அமைக்க வேண்டும். | தற்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவை இயக்கநிலையில் வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |